**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 23/மா/2022**

**நாள் : 31 .3.2022**

திரு. ந.ராஜ்குமார்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–05,
பெருநகர சென்னை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, ஸ்டான்லி நகர், 3–வது தெரு, எண்.2/25 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. ந. ராஜ்குமார் என்பவரின் 22.02.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 23/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

சென்னை, ஸ்டான்லி நகர், 3–வது தெரு, எண்.2/25 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. ந. ராஜ்குமார் தன்னுடைய 22.02.2022 நாளிட்ட புகார் மனுவில், " மண்டலம் 5, வார்டு 49, ராயபுரம் மேற்கு கல்மண்டப சாலை கதவு எண்.51/52 கொண்ட கட்டிடமானது பெருநகர சென்னை மாநகராட்சி விதிமுறை மீறி கட்டிடம் கட்டி வருவதாக 23.07.2021 அன்றைய தேதியில் மண்டல அலுவலர் மற்றும் வடக்கு வட்டார ஆணையர் அவர்களுக்கும் புகார் மனு சமர்ப்பித்திருந்ததாக தெரிவித்து, நடவடிக்கை எடுக்காததால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் சில கேள்விகள் கேட்கப்பட்டதில் 05.10.2021 அன்று கட்டிடத்தின் மூன்றாவது மாடி அனுமதி பெறாமல் கட்டியதாகவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி விதியை மீறி கட்டியதாகவும் (திட்ட வரைபடம் ) பதில் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்காததால் 21.11.2021 அன்று முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு புகார் மனு சமர்ப்பித்த பிறகு 20.12.2021 அன்று வார்டு 49 இளநிலை

பொறியாளர்கள் அவர்களிடம் புகார் மனு அளித்ததில் தங்களின் புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க இயலாது எனவும், விதிமீறி கட்டிடம் கட்டி வருபவர் பெரும் செல்வந்தர் மற்றும் அரசியல் பலம் மிக்கவர் ஆகவே தங்களின் புகார்மனு கிடப்பில்தான் இருக்கும். அதுமட்டுமல்ல கட்டிடத்தின் உரிமையாளர் நீங்கள் இருக்கும் இடம் இல்லாமல் ஆக்கிவிடுவார் என விதிமீறல் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாக பதில் அளித்தார் என்றும், மேலும் தொடர் நடவடிக்கை வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 08.01.2022 அன்று மீண்டும் புகார் மனு அளிக்கப்பட்டதாகவும், இது சம்மந்தமாக இளநிலை பொறியாளர் அவர்களை கேட்டதில் நீங்கள் எங்கு சென்றாலும் பணபலமும் அதிகார பலமும் உள்ளவரிடம் உங்களால் ஏதும் செய்ய இயலாது ஆகவே விலகிக்கொள்ளுங்கள் என்று பதில் அளித்துள்ளதாக தெரிவித்து தனது புகார் மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைத்திட வகை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.03.2022 நாளிட்ட கடிதம் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்–05, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–05, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோரை 22.03.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.3.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) மனுதாரர் 22.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–05– வார்டு 49 மேற்கு கல்மண்டபம் சாலை, கதவு எண் 51/52ல் கட்டப்பட்டு வரும் கட்டடம் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டு வருகின்றன. அனுமதி பெற்ற மாடியை விட (ground +2) மேலும் ஒரு மாடி கட்டடம் கட்டியுள்ளனர். வரைபட அனுமதியின்படி கட்டிடம் கட்டாமல், அக்கட்டடத்தில் வாகன நிறுத்தத்திற்காக இடம் ஒதுக்கப்படாமல் அந்த இடத்தில் (car parking) வணிகக்கட்டிடம் கட்டியுள்ளனர். இது தொடர்பாக மாநகராட்சி அலுவலகத்தில் பலமுறை புகார் செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, விதிமுறைகளை மீறி கட்டப்பட்டு வரும் மேற்கண்ட கட்டிடத்திற்கு Lock & Seal and Demolition Notice வழங்கிட தேவையான நடவடிக்கைகளை எடுத்திட இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–05 ன் செயற்பொறியாளர் 22.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு 49 மேற்கு கல்மண்டபம் சாலை, கதவு எண்.51/52ல் கட்டப்பட்டு வரும் கட்டடம் விதிமுறை மீறி கட்டப்பட்டு வந்ததால், அக்கட்டட உரிமையாளருக்கு 26.02.2022 அன்று Stop Work Notice -ம், 21.03.2022 அன்று Lock & Seal and Demolition Notice–ம் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்:

6) மேலும் மண்டல அலுவலர், மண்டலம்–05 அவர்கள் தனது 21.03.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்துள்ளார்:

" மண்டலம்–5, பகுதி 12, வார்டு 49க்கு உட்பட்ட கதவு எண்.51/52, மேற்கு கல்மண்டபம் சாலையில் உள்ள கட்டிடம் தொடர்பாக திரு.ராஜ்குமார் என்பவர் 23.07.2021 அன்று விதி மீறி கட்டியிருப்பதாக தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க மனு சமர்ப்பித்தார். இதன்படி கோப்பினை ஆய்வு செய்து கட்டிட உரிமையாளர் திரு.ஜெயபிரகாஷ் கட்டிட அனுமதி பெற்ற PPA No.4510 & 4009/2019 கட்டிடம் மற்றும் திட்ட அனுமதி உரிய கட்டமைப்பு பெறப்பட்டதாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்படி திரு.ராஜ்குமார் என்பவரால் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் கீழ் சில தகவல் கோரி மனு பெறப்பட்டது. அதற்கான தகவல் 05.10.2021 அன்று பொது தகவல் அலுவலர் மூலம் பதிலளிக்கப்பட்டுள்ளது. அதன் பின் கடந்த 21.11.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தனிபிரிவு கீழ் அளிக்கப்பட்ட புகாரின் சமயத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததன் காரணத்தால் அதன் தீவிரம் முழுமையடையும் காலம் வரை களபணி மேற்கொண்ட காரணத்தாலும், அதனை தொடர்ந்து உள்ளாட்சி தேர்தல் பணியினை மேற்கொண்ட காரணங்களாலும் மேற்கண்ட புகார் மனுவை ஆய்வு செய்ய இயலாமல் போனது. மீண்டும் 08.01.2022 அன்று மேற்கண்ட நபரால் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பிரிவில் அளிக்கப்பட்ட புகாரை அடுத்து மேற்கண்ட விலாசத்தில் கள ஆய்வு மேற்கொண்டு அதன் கட்டிட மற்றும் திட்ட வரைவு நகல் கேட்கும் தாக்கீது கடந்த 26.02.2022 Notice No.05/06501/2022 (Calling for plan Approval) அன்று வழங்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக கடந்த 19.03.2022 அன்று கட்டிடம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டது. 21.03.2022 அன்று (Lock and Seal and Demolition Notice Letter No. 05/04821/2022) தாக்கீது வழங்கப்பட்டு கட்டிட குறைபாடுகள் சரி செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேற்கொண்டு துறை ரீதியாகவும் & நகரமைப்பு சட்ட மூலமாக மேற்கண்ட புகாருக்கு தகுந்த நடவடிக்கை மேலும் தேவைப்படும் பட்சத்தில் எடுக்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என்று தெரிவித்துள்ளார்.

7) இந்நேர்வு தொடர்பாக முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், மண்டல அலுவலர், மண்டலம் –5 ன் செயற்பொறியாளர் அவர்களின் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரான திரு.ந.ராஜ்குமார் மண்டலம்–5 வார்டு 49 ராயபுரம் மேற்கு கல்மணடபம் சாலை கதவு எண்.51/52ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் விதிமுறைகளை மீறி கட்டிடம் கட்டப்பட்டு வருவதாவும் அனுமதி பெற்ற மாடியை விட மேலும் ஒரு மாடி கட்டிடம் கட்டியுள்ளார் என்றும் Car parking என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் வணிக கட்டிடம் கட்டியுள்ளார் என்றும் தெரிவித்து விதிமீறி கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு Lock and Seal and Demolition Notice வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கதவு எண்.51/52–ல் கட்டப்பட்டு வரும் கட்டிடம் விதிமுறைகள் மீறி கட்டப்பட்டு வந்ததால் அக்கட்டிட உரிமையாளருக்கு 26.02.2022 அன்று Stop work Notice–ம், 21.03.2022 அன்று Lock and Seal and Demolition Notice–ம் வழங்கப்பட்டுள்ளது என்று மண்டல செயற்பொறியாளர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மண்டல அலுவலரும் தமது 21.03.2022 நாளிட்ட அறிக்கையில் இதனை உறுதி செய்துள்ளார். இருப்பினும் ஆணையரிடமிருந்து Lock & Seal அனுமதி பெற்று கட்டடத்திற்கு Lock & Seal வைப்பதற்கும் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உரிய நடவடிக்கையினை எடுத்திட மண்டல அலுவலர், மண்டலம்–05

அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதில் எவ்வித தாமதமும் கூடாது என மண்டல அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். தாமதம் ஏற்படுத்தப்பட்டு மீண்டும் புகார் வருமாயின் மண்டல அலுவலரும், சக அலுவலர்களுமே பொறுப்பு என இம்மன்றம் கருதும்.

2022-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள்,31-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.ந.ராஜ்குமார்,
   எண்.2/25, ஸ்டான்லி நகர் 3–வது தெரு,
   ஸ்டான்லி நகர்,
   சென்னை – 600 021.
2. மண்டல அலுவலர்,
   மண்டலம்–05,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   சென்னை – 600 021.
3. ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   (மழைநீர் வடிகால் துரை),
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக